C47

# இலங்கை திறந்த பல்கலைக் கழகம்
## தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கைநெறி
## இறுதிப் பரீட்சை – 2008
## MCC 1206 - கணக்கியலும் நிதியியலும்
காலம்: இரண்டு (2) மணித்தியாலங்கள்

திகதி : 21.12.2008 நேரம்: 01.30 பி.ப – 03.30 பி.ப

அறிவுறுத்தல்கள்

- முதலாம் வினா உட்பட நான்கு (4) வினாக்களுக்கு விடையளிக்கவும்
- நிகழ்சிப் படுத்தப்படாத எண் கூட்டு இயந்திரங்கள் பாவிப்பதற்கு அனுமதிக்கப்படும்.

**01.** மகேஸ் வியாபாரத்தின் ஏடுகளிலிருந்து, 31.12.2007 இல் முடிவடைந்த வருடத்திற்கான, பின்வரும் தகவல்கள் வழங்கப்படுகின்றன.

31 டிசம்பர் 2007 இல் முடிவுற்ற வருடத்திற்காக தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி

| மீதிகள் | வரவு ரூபா | செலவு ரூபா |
|---|---|---|
| அறவிடமுடியாக் கடன் | 3,000 | |
| காப்புறுதி | 18.000 | |
| பெற்ற தரகு | | 20,000 |
| 1.1.2007 இல் சரக்கிருப்பு | 28,000 | |
| வங்கிக் கட்டணங்கள் | 5,000 | |
| காசும் வங்கியும் | 36,000 | |
| காணி, கட்டிடம்/1.1.2007 இல் திரண்ட பெறுமானத் தேய்வு | 850,000 | 350.000 |
| தளவாடங்களும்,பொருத்துக்களும்/1.1.2007 இல் திரண்ட பெறுமானத்தேய்வு | 400,000 | 180,000 |
| பொதியிடல் | 6,000 | |
| விற்பனைத் திருப்பம் | 6,500 | |
| கொள்வனவுத் திருப்பம் | | 8,000 |
| கடன்பட்டோர் | 43,000 | |
| கடன் கொடுத்தோர் | | 56,000 |
| வங்கிக் கடன் 12% | | 220,000 |
| வங்கிக் கடனுக்கான வட்டி | 13,000 | |
| கொடுத்த கழிவு | 8,000 | |
| பெற்ற கழிவு | | 10,000 |
| சம்பளங்கள் | 25,000 | |
| விளம்பரப்படுத்தல் | 18,000 | |
| கொள்வனவுகள் | 860,000 | |
| விற்பனைகள் | | 1,480,000 |
| மகேஸின் பற்றுக்கள் | 27,000 | |
| தொலைபேசி | 15,000 | |
| சட்ட கட்டணங்கள் | 18,000 | |
| 8% முதலீடுகள் | 320,000 | |
| பெற்ற முதலீட்டு வருமானங்கள் | | 18,000 |
| உட்காவுகை | 7,000 | |
| மகேஸின் மூலதனம் | | 364,500 |
| | 2,706,500 | 2,706,500 |

OPEN UNIVERSITY OF SRI LANKA LIBRARY

பின் வரும் தகவல்களையும் கருத்திற் கொள்க

- பொதியிடல் பொருட்களில் ரூபா. 2,000 பெறுமதியானவற்றை அடுத்த வருடத்திற்கு (2008) பாவிக்க முடியும்.
- திரு. மகேஸின் மனைவியுடைய ஆயட்காப்புறுதிக் கட்டணமாக, ரூபா. 3500 வும், பரீட்சை மீதியில் வழங்கப்பட்டுள்ள காப்புறுதிக் கட்டணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- 2007 டிசம்பர் மாதத்திற்குச் செலுத்த வேண்டிய தொலைபேசிக் கட்டனமாகிய ரூபா. 1500, 2007 ம் ஆண்டு முடியும் வரை செலுத்தப்படவில்லை.
- கட்டடங்கள் நேர்கோட்டு முறையில் 10%, தேய்விடப் பட வேண்டியிருந்தது
- கட்டடங்களும், பொருத்துக்களும் 5%, குன்றும் மீதி முறையில் தேய்விடப்பட வேண்டியிருந்தது.
- மேற்கூறப்பட்ட நடைமுறையில்லாச் சொத்துக்களுக்கு 2007ல் தேய்விடப்படவில்லை
- வங்கிக் கடனும், முதலீடுகளும், வருட ஆரம்பத்திலிருந்தே கம்பனியின் ஏடுகளில் காணப்படுகின்றன. வங்கிக் கடனுக்கான வட்டியும், முதலீட்டிலிருந்தான வருமானமும், வருட இறுதியில் நிலுவைகளாகக் காணப்பட்டன.
- 31.12.2007, இறுதி இருப்புக்கள் ரூபா. 18000 ஆக மதிப்பிடப்பட்டது
- பரீட்சை மீதியில் தோன்றும் கடன்பட்டோரில், ரூபா. 2000 அறவிட முடியாக் கடனாக பதிவழிப்பதுடன், மீதிக் கடன்கபட்டோரில் 5% ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்யப்படவேண்டியிருந்தது.

நீர் வேண்டப்படுவது,

- 31.12.2007 ல் முடிவடைந்த வருடத்திற்கான, வியாபார, இலாப நட்டக் கணக்கு
- 31.12.2007 ல் உள்ளபடியான பரீட்சை மீதி (40 புள்ளிகள்)

2. ரூபன் உள்ளூர் சந்தைக்காக ஐஸ்கிறீம் உற்பத்தி செய்கிறார். 31.12.2007. இல் முடிவைடைந்த வருடத்திற்கான ஐஸ்கிறீம் உற்பத்தி தொடர்பான பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

பழங்கள், நிறமூட்டிகள், சீனி ரூபா. 125,000
ஏனைய நேரில் மூலப் பொருட்கள் ரூபா. 12,000
மின்சாரமும், வலுவும் ரூபா. 24,000 (20% அலுவலக நிர்வாகத்திற்கு ஒதுக்கப்படும்).
தொலைபேசி ரூபா. 5,000 (80% அலுவலகத்திற்குரியது)
நேர்க்கூலிகள் ரூபா. 72,000
வாடகை ரூபா. 12,000 (தொழிற்சாலையானது மொத்தப்பரப்பில் 50% இடத்தில அமைந்துள்ளது)
01.01.2007ல் மூலப் பொருள் இருப்பு ரூபா. 15,000
31.12.2007 ல் மூலப் பொருள் இருப்பு ரூபா. 12,000
மேற்பார்வையாளர் சம்பளம் ரூபா. 20,000
நடைமுறை வேலை – 01.01.2007ல் ரூபா. 16,000
நடைமுறை வேலை – 31.12.2007ல் ரூபா. 8,000
இயந்திரங்கள் மீதான தேய்வு ரூபா. 16,500
மூலப் பொருட்களுக்கான உட்காவுகை ரூபா. 3,000

மேற்கூறிய தகவல்களை உபயோகித்து, பின்வருவனவற்றை தயாரிக்க.

அ. ரூபன் 31.12.2007 முடிவடையும் வருடத்திற்கான உற்பத்திக் கணக்கு
ஆ. ரூபன் 2007ல் 30,000 ஐஸ்கிறீம் கப்களை உற்பத்தி செய்ய முடிந்திருப்பின், ஒரு ஐஸ்கிறீம் கப்பிற்கான உற்பத்திச் செலவு யாது?
இ. இலாப எல்லையானது 30% இருப்பின், ஐஸ்கிறீம் கப் ஒன்றன் விலை யாது?

(20 புள்ளிகள்)

3. ஏப்பிரல் 1ம் திகதி 2007ம் ஆண்டு, ஜீவன் அச்சகம் ஒன்றை ஆரம்பித்தார். வியாபாரத்தின் முதலாம் மாதத்தின் போது, அவருடைய அச்சகத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

| | |
|---|---|
| 01.04.2007 | ஜீவன், ரூபா. 200,000 காசையும் ரூபா. 150,000 மதிப்புள்ள அச்சு உபகரணங்களையும் மூலதனமாக இட்டார். |
| 03.04.2007 | ரூபா. 25,000 இலங்கை வங்கியில் வைப்பிலிட்டு வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது. |
| 07.04.2007 | ரூபா. 38,000 காசாகச் செலுத்தி, அச்சுக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 12.04.2007 | வழங்கிய அச்சுச் சேவைகளுக்காக பெறப்பட்ட வருமானம் ரூபா. 15,000 |
| 15.04.2007 | செலுத்தப்பட்ட நிர்வாகச் செலவுகள் ரூபா. 2,700 |
| 17.04.2007 | திருமதி ஜீவனுடைய ரூபா. 2,000 பெறுமதியான தொலை பேசிச் சிட்டை, வியாபாரத்தின் பணத்திலிருந்து செலுத்தப்பட்டது. |
| 18.04.2007 | அச்சடித்தல் சேவைகளுக்காக பெற்ற பணம் ரூபா. 15,000 |
| 20.04.2007 | ரூபா. 13,000 பெறுமதி அச்சுக் கருவிகள், லாலிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன. |
| 22.04.2007 | வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய சேவைகளுக்காக பெறவேண்டிய பணம் ரூபா. 18,000 |
| 25.04.2007 | லாலின் எல்லாக் கடனையும் தீர்க்கும் பொருட்டு ரூபா. 12,000 செலுத்தப்பட்டது. மீதி கழிவாக அனுமதிக்கப் பட்டது. |
| 29.01.2007 | கடன் பட்டோரின் ரூபா. 18,000 பெறுமதியான கடனைத் தீர்க்கும் பொருட்டு ரூபா. 16,500 கடன்பட்டோரிடமிருந்து பெற்றுக் கொள்ளப் பட்டது. மீதி கழிவாக அனுமதிக்கப் பட்டது. |
| 31.01.2007 | ஜீவன் ரூபா. 3,000 பணத்தையும், ரூபா. 4,500 பெறுமதியான அச்சுக் கருவியையும் பற்றிக் கொண்டார். |

அவருடைய வியாபாரத்தின் முதலாம் மாதத்தின் போது இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் சமன்பாட்டில் காட்டுக.

மூலதனம் + நீண்ட காலக் கடன்கள் + நடைமுறைக் கடன்கள் = நிலயான சொத்து + நடைமுறைச் சொத்து

(20 புள்ளிகள்)

04.

(i) நிறுவனமொன்றில் பேணப்படும் வேறுபட்ட துணைநிலை (subsidiary books) ஏடுகளை குறிப்பிடுக. ஒவ்வொரு வகையான துணைநிலை ஏடுகளினதும் பயன்களை ஆராய்க.

(ii) காசுப் பாதீடும்(cash budget), காசுப் பாய்ச்சற் கூற்றும் (cash flow statement) ஒரே மாதிரியானவையா,மாறுபட்டவையா என விமர்சிக்கு

(iii) சிறிய வியாபார உரிமையாளர்களுக்கு, தங்களுடைய நடைமுறை மூலதனத் (working capital) தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கிடைப்பனவாக உள்ள மூலங்களை ஆராய்க.

(iv) ஏதாவது மூன்று கணக்கீட்டு விகிதங்களை (accounting ratios) விளக்குக. அவ்வொவ்வொரு கணக்கீட்டு விகிதங்களையும் கணிப்பிடுவதன் நன்மைகளை விளக்குக. (20 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றில் ஏதாவது ஐந்திற்கு (5) சிறு குறிப்பு எழுதுக.

அ. இரட்டைப் பதிவு முறை
ஆ. சில்லறைக் காசேட்டு முறை
இ. வங்கிக் கணக்கிணக்கக் கூற்று
ஈ செயன் முறை கிரயவியல் (process costing)
உ. இலாப நட்டமற்ற புள்ளி (Break –even point)
ஊ. செயற்றிட்ட மதிப்பிட்டு முறைகள். (Methods of project appraisal)

(20 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)